# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,**
**(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்)**
**சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590**

**காணொளிகாட்சி விசாரணை (Video Conference)**
**ஆணை நாள்: 04.06.2025**

**முன்னிலை**
**முனைவர் மா.செல்வராஜ் எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

…………

**வழக்கு எண். SA1374/F/2025**

திரு C. ஜெகதீசன் ... மனுதாரர்

/ எதிர் /

பொது தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
இலால்குடி - 621601.
திருச்சிராப்பள்ளி மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

******

## ஆணை

மேற்குறிப்பிட்ட வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தால் காணொளிகாட்சி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு.C.ஜெகதீசன் அவர்கள் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.கி.பன்னீர்செல்வம், பொதுத் தகவல் அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலகம், இலால்குடி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஆகியோர் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்கள்.

2. மனுதாரர் 20.07.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், திருச்சி மாவட்டம், இலால்குடி ஊராட்சி ஒன்றியம் செவந்திநாதபுரம் ஊராட்சி நிர்வாகத்தின் கடந்த 2022-2023ம் ஆண்டு மற்றும் 2023-2024 ஆண்டில்

ஊராட்சி நிர்வாகத்திற்கு எந்த எந்த இனங்களில் செலவுகள் செய்யப்பட்டன என்பதை மாதங்கள் வாரியாக உள்ள வரவு செலவு பட்டியலின் நகல்கள், ஊராட்சி நிர்வாகத்தின் கடந்த 2022-2023ம் ஆண்டு தணிக்கை செய்யப்பட்ட தணிக்கை அறிக்கையின் நகல்கள், தெரு விளக்கு மற்றும் பைப் லைன் சாமான்கள் கொள்முதல் செய்யப்பட்ட கடையின் Bills, செவந்திபுரம் ஊராட்சியில் கடந்த 06.04.2022ம் தேதி அன்று ரூ.19,68,156/- லட்சத்திற்கு IAY திட்டநிதியில் இருந்து மற்ற செலவுகளுக்கு செலவு செய்யப்பட்டது என்பது போன்ற தகவல்களை 6 இனங்களில் வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர்/துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) (பொது), இலால்குடி ஊராட்சி ஒன்றியம் அவர்கள் 02.09.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவி 6(3)இன் கீழ் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ம-3), ஊராட்சி ஒன்றியம், இலால்குடி, உதவி பொதுத் தகவல் அலுவலர் / ஊராட்சி செயலர், செவந்திநாதபுரம் ஊராட்சி, இலால்குடி ஆகியோருக்கு தகவல் வழங்கும் பொருட்டு மாற்றம் செய்துள்ளார், பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்காத காரணத்தால் மனுதாரர் 09.09.2024 நாளிட்ட பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் 08.01.2025 நாளிட்ட பிரிவு **19(3)**இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தால் காணொளிகாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், இதுநாள் வரையில் பொதுத் தகவல் அலுவலர்கள் எவ்வித தகவல்களையும் வழங்கவில்லை எனவும், உரிய காலத்திற்குள் முழுமையான தகவல் வழங்காத பொதுத் தகவல் அலுவலர் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு, முழுமையான தகவல்களைப் பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரியுள்ள தகவல்களை நேரில் சார்வு செய்ய கொண்டு வந்துள்ளதாக ஆணையத்தில் தெரிவித்தார். மேலும், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க அனைத்து இனங்களுக்கான தகவல்களை விரைவில் மனுதாரருக்கு பதிவஞ்சல் வாயிலாக வழங்குவதாக ஆணையத்தில் உறுதியளித்தார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது எனவே, இன்றைய விசாரணையில் பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் வழங்கி கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கின்றது:-

- ***மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரியுள்ள அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை உரிய ஆவண நகல்களுடன் <u>“தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது” என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகலினை***

***இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.***

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA1374/F/2025</u>**

**<u>பெறுநர்</u>**

பொது தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
இலால்குடி - 621601.
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

**<u>மனுதாரர்</u>**

திரு C. ஜெகதீசன்,
எண் 3-59, மேலத்தெரு, மருதூர்,
இலால்குடி தாலுக்கா,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்
621112

Copy to: Judgement File/ Spare.
JE / PA 04.06.2024.